2. தகவல் கோரல்—*தொடர்ச்சி*

(அ) சட்டமன்ற உறுப்பினர்கள் பற்றி ஆங்கிலத் தொலைக்காட்சி செய்தி—*தொடர்ச்சி*

மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கடந்த 2, 3 நாட்களாக வழக்கு மன்றத்தில் நிலுவையில் இருக்கிற ஒரு பொருளைக் குறித்து இங்கே தொடர்ந்து பிரச்சினையை எழுப்பிக் கொண்டிருக்கிறார். (குறுக்கீடு) மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்கள், இந்தப் பொருள் வழக்கு மன்றத்திலே நிலுவையில் இருக்கிறது; (குறுக்கீடு) இந்தப் பிரச்சினையை அவையில் எடுத்துக்கொள்ள முடியாது என்று இறுதியாகவும், உறுதியாகவும் தீர்ப்பளித்திருக்கிறார்கள். அதைத் தொடர்ந்து இங்கே வலியுறுத்துவது உகந்தது அல்ல, அவைக்குப் புறம்பானது என்பதை வலியுறுத்திச் சொல்கிறேன். (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *உட்காருங்கள். (குறுக்கீடு) அவர் தவறாக ஒன்றும் சொல்லவில்லை. (குறுக்கீடு) சொல்வதைக் கேளுங்கள். அவர் ஒன்றும் தவறாகச் சொல்லவில்லை. நான் சொன்ன தீர்ப்பைத்தான் அவர் திரும்பச் சொல்லியிருக்கிறார், அவ்வளவுதான். (குறுக்கீடு) நான் சொன்ன தீர்ப்பைத்தான் அவர் சொல்லியிருக்கிறார், உட்காருங்கள்.*

3. சிறப்புக் கவன ஈர்ப்பு—*தொடர்ச்சி*

(அ) இலங்கை கடற்படையால் தமிழக மீனவர்கள் பாதிப்பு—*தொடர்ச்சி*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி.பி. சாமி, மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்தை ஈர்த்து, சுருக்கமாகப் பேசுங்கள்.*

***திரு. கே.பி.பி. சாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்படுகின்ற தமிழக மீனவர்கள் மற்றும் அவர்களது வாழ்வாதாரமாக விளங்கும் விசைப் படகுகளை இலங்கை அரசிடமிருந்து மீட்பது சம்பந்தமாக அவையினுடைய கவனத்தை ஈர்த்து அமைகின்றேன். (குறுக்கீடு)*